வெளியீடு-௪

ஓம்

உவமை அகரவரிசை

○

இடநோக்கி உவமை
அமைத்துப் பொருள் சிறக்கப்
பேசவும் எழுதவுங் கற்பிப்பது.

○

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்
சென்னை

 [விலை அணா 3

முதல் பதிப்பு : பிப்ரவரி 1939
2-ம் பதிப்பு : ஜுன் 1948

முன்னுரை

நம் பழந்தமிழ் நூல்களிலும், பிற்காலப் புலவர் பெருமக்கள் எழுதிய உரைநடை நூல்களிலும், பேச்சுவழக்கிலும் ஆயிரக் கணக்கான உவமைகள் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள் மிகுபயனுடையவும், எளிய நடையினவுமான உவமைகளில் ஏறக்குறைய எழுநூற்றை மட்டும் ஆராய்ந்து எடுத்து அகரவரிசைப்படுத்தி இதன்கண் வெளியிட்டிருக்கின்றோம்.

பொருள்நயம் பொலிந்து விளங்குமாறு உரைநடை எழுத விரும்புவார்க்கும், கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேச விழைவார்க்கும் இவ்வுவமைகள் பழமொழிகள் போலப் பெருந்துணை புரிவனவாம். இவ்வுவமைகளிலும் பல பழமொழிகளாக வழங்குகின்றன என்பது அறிதற்பாலது.

இந்நூல் சிறப்பாகக் கல்லூரி மாணாக்கர்கட்கும், பொதுவாகத் தமிழ் மக்களனைவர்க்கும் பயன்படுவதொன்றாகும். இக் கழகத்தார் வெளியிட்டுள்ள ஏனைய நூல்களைப்போல மிகவும் எளிய விலைக்குக் கிடைக்கப்பெறும் இந்நூற்படிகளைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை வாங்குமாறு தூண்டியும், தமிழ்ச் செல்வர்கள் நூற்றுக் கணக்காக வாங்கித் தமிழ்மக்கட்கு விலையின்றி வழங்கியும் எம் தமிழ்த்தொண்டைச் சிறக்கச் செய்யுமாறு அவர்களைப் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்.

ஓம்

உவமை யகரவரிசை

அகலாதணுகாது தீக்காய்வார் போல
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல
அங்கணத்துளுக்க அமிழ்தம் போல்
அச்சில்லாத தேர் போல
அடிபட்ட பந்துபோல
அடிமரம் போல்
அடியற்ற மரம்போல்
அடியிலிருந்து கரும்பு தின்பது போல
அடியும் நுனியும் தறித்த கட்டைபோல
அடிவயிற்றில் இடி விழுந்தது போல்
அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு போவதுபோல்
அடுங்காலை நீர்கொண்ட வெப்பம்போல
அடுத்தது காட்டும் பளிங்குபோல
அடை காத்த கோழிபோல
அணை கடந்த வெள்ளம் போல்
அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் வைத்ததுபோல
அத்தி பூத்தாற் போல
அநுமார் இலங்கையில் சீதையைத் தேடினது போல்
அந்தி அங்காடிக் கடைபோல
அந்திக் காலத்துத் தாமரை போல்
அம்பட்டன் குப்பையைக் கிளறுவது போல
அம்பு செய்து கொடுத்த கருமானை எய்வது போல
அம்பேறுண்ட மயில போல
அம்மி துணையாக ஆறு இறங்கியது போல
அரங்கின்றி வட்டாடியது போல
அரம் பொருத பொன்போல
அரிசி அள்ளுகிற காகம் போல
அருஞ்சுரத்தின் மரம்போல
அரைக் கிணறு தாண்டியவனைப் போல்
அரைப் படிப்பைக் கொண்டு அம்பலம் ஏறுவதுபோல

அரைப் பணம் கொடுத்து அழச்சொல்லி, ஒரு பணம் கொடுத்து
ஓயச் சொன்னது போல
அலைபுனலுள் நிற்பினும் தாமரை ஈன்ற இலையின்
கண் நீர்நிலாதது போல்
அல்லித்தண்டு போல
அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல
அழகிய நீலபடாத்தின் விரிவில் நித்திலத் தாவினு லென 35
அழகுக் கழகு செய்வது போல
அழகுள்ள மங்கைக்கு அணிந்த அணிகலன்போல்
அழகெலாந் திரண்ட பசும்பொற் பாவை போல
அழலருகே சேர்ந்த மலர் போல
அழன் மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கெல்லாம்
நிழல்மரம் போல 40
அழுகுரலோசை கேட்ட அந்தணர் போல
அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போல
அளிந்த புண்ணில் அம்பு பட்டது போல்
அறத்தாற்றின் வழங்காதான் ஆக்கம்போல்
அறிதோறும் அறியாமை கண்டற்று 45
அறுகயிற் றூசல் போல
அறுத்த கோழி துடிக்குமாப் போல
அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல்
அற்ற குளத்துக் கொட்டியும் ஆம்பலும் போல
அன்றிலும் பேடும் போல 50
அன்ன நடை நடக்கப்போய்த் தன் நடையும் இழந்தாற் போல்
ஆகாயத்திற் கட்டிய கோட்டை போல
ஆடி ஒய்ந்த பம்பரம் போல்
ஆடிக் காற்றில் உதிரும் சருகுபோல
ஆடு குழை தின்றாற் போல 55
ஆடுங் கறங்குந் திரிகையும் போல்
ஆடும் பெண்டிர் அணியே போல்
ஆடு பிடிக்கப் போய்க் காடி அகப்பட்டது போல்
ஆண்டிகள் கூடி மடங்கட்டினது டோல்
ஆந்தை விழிக்கிறது போல 60
ஆப்பதனைப் பிடுங்கிவிட்ட பேய்க் குரங்கு போல
ஆமை திடரில் ஏறினாற் போல
ஆயிரம் பாட்டிற்கு அடிதெரியும் என்றாற் போல

ஆயிரம் பாம்பினுள் ஒரு தேரை அகப்பட்டாற் போல
ஆயும் மலர்த் தேன் வண்டருந்துவது போல் 65
ஆலம் வித்துப் போல
ஆல விழுது தாங்கி நிற்பது போல
ஆலையில் அகப்பட்ட கரும்பு போல
ஆழ்ந்த கடலுக்குள் புதைந்து கிடக்கும் முத்தைப் போல்
ஆழ்ந்தகுளம் தன் ஆழத்தைக் காட்டாமல் அமைதியாயிருப்பது போல 70
ஆவிற்கு இரு கோடு போல
ஆ வேறு உருவினதாயினும் ஆபயந்த பால் வேறு உருவினவல்லாதது போல்
ஆளவந்தவனை அடிமை செய்தது போல்
ஆளைப் பார்த்தால் அழகு போல வேலையைப் பார்த்தால் இழவுபோல
ஆறிடுமேடு மடுவும்போல் 75
ஆற்றங் கரையின் மரம்போல்
ஆற்றில் கரைத்த புளி போல்
ஆற்றிற் பறிகொடுத்துக் குளத்தினில் தேடியதைப் போல
ஆற்றைத் தாண்ட முடியாதவன் ஆழியைத் தாண்ட முயன்றவாறு போல
ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்ததுபோல 80
ஆனை தன் கோட்டிடை வைத்த கவளம் போல்
ஆனை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டது போல
ஆனையும் ஆனையும் மோதும்போது இடையி லகப்பட்ட கொசுகு போல
ஆனை வாயிலே போன கரும்பு போல
ஆன்படு நெய் பெய் கலனுள் அது களைந்து
வேம்படு நெய் பெய் தனைத்து 85
இடந்தெரியாதிருந்த புதையல் எதிர்வரப் பெற்றவர் போல
இஞ்சி தின்ற குரங்கு போல
இடாது பலய தேடும் சோரர் போல
இடி இடித்து மழை ஓய்ந்தது போல
இடிகரை வாழ் மரம் போல் 90
இடித்த புளி போல
இடி யோசை கேட்ட பாம்பு போல்
இடி விழுந்த மரம் போல

இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா கொடிப்
புற் கறிக்காதது போல்
இணை பிரிந்த அன்றில் போல 95
இரண்டு கண்ணு மில்லாதவனை நல்லகண்ணன் என்பது போல்
இரண்டோடத்திற் கால் வைத்தவனைப் போல
இரவும் பகலும் மாறிமாறி வருவது போல்
இருதலைக் கொள்ளியினுள் எறும்பு போல
இருதலைப் புள்ளின் ஓருயிர் போல் 100
இருநாய்க் கிட்ட எலும்பு போல
இருப்புக் கோட்டையும் கற்கதவும் போல
இரும்புங் காந்தமும் பொருந்துந் தன்மை போல்
இரும்புத் தூணை எறும்பு அரித்தாற் போல
இலவு காத்த கிளி போல 105
இலை நலவாயினும் எட்டி பழுத்தாற் குலைநலவாய்கனி கொண்டுண
லாகாதது போல்
இலை மறை காய் போல
இழந்த பொருள் எதிர்வரப் பெற்றவர் போல
இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதே போல்
இழிந்தவை காமுறும் ஈப்போல 110
இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் போல்
இழுமெனும் ஓசையி னெழுகுறும் அருவிபோல்
இள ஞாயிறு போல்
இளந்திங்களின் வளர் நிலவு போல
இனம் இனத்தை நாடுமாப் போல 115
இனம் பிரிந்த மான் போல
இன்சுவைத் தேனை ஈக்கள் சுற்றுவது போல
ஈங்கையிட்டு வரகுழுவார் போல
ஈன்றோள் நீத்த குழவி போல்
உடலும் நிழலும் போல 120
உடுக்கை இழந்தவன் கை போல
உடும்புப் பிடி போல
உடைந்தழிக் காகம் போல்
உடையவன் பாரா வேலை போல்
உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசுவார் போல 125
உண்டில்லை யென்னுங் குமிழியைப் போல
உண்ணுதற்குத் தகுதியில்லாத வாவியில் நீர் நிரம்பியிருத்தல் போல

உப்பிருந்த பாண்டம் போல
உப்பொடு நெய்பால் தயிர் காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச் சுரையின் காய் போல்
உமியைக் குத்திக் கை சலித்தாற் போல 130
உயிரும் உடலும் போல
உயிரைப் பிரிந்த உடம்பு போல
உரிய காலத்திற் பெய்த மழை போல்
உருத்திராக்கப் பூனை உபதேசம் பண்ணினது போல
உருள்பெருந் தேருக்கு அச்சாணிபோல 135
உலக்கைக் கொழுந்து போல
உலைப்படு மெழுகு போல
உலைப் பெய்து அடுவது போல
உழுகிற நாளில் ஊருக்குப் போய், அறுக்கிற நாளில் அரிவாள்
கொண்டு வந்தாற் போல
உழுந்துக் குவியலுட் புகுந்த மையுருண்டை போல 140
உழுந்துருள் நேரம் போல்
உள்ளங்கை நெல்லிக்கனி போல
உள்ளீ டில்லாப் பதர் போல
உள்ளீ டில்லாப் புழலையான மூங்கிற்கோல் போல
உறங்கி விழிப்பது போல 145
உறுபுனல் தந்துலகூட்டி அறுமிடத்தும்
கல்லூற்றுழியூறும் ஆறே போல்
உறை மோருக்கு இடமில்லாத வீட்டில் விலை மோருக்குப்
போனாற் போல
உனக்கு உட்பட்டுப் பின்பாட்டுப் பாடுகிற மனிதர் போல
ஊசல் கயிறு அற்றாற் போல
ஊசியும் சரடும் போல் 150
ஊத்தைப் பல்லுக்கு விளாங்காய்சேர்ந்தாற் போல்
ஊணொடுங்க வீறொடுங்குமாறு போல
ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்தாற் போல
ஊமைகண்ட கனாப் போல
ஊமை செய்யும் பிரசங்கத்தைச் செவிடன் கேட்டது போல் 155
ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால் பேரும்
பிறிதாகித் தீர்த்தமாதல் போல்
ஊருணி நீர் நிறைந்தாற் போல
ஊர் குடிச் செக்குத் தள்ளினாற் போல

ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும் போல
எச்சிலிலைக்கு நாய் அடித்துக்கொண்டு நிற்கிறது போல 160
எச்சிலைத் தின்று எப்பம் இட்டாற் போல
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டது போல
எட்டி பழுத்தாற் போல்
எட்பசவு போல்
எண்ணெய்க் குடத்தைச் சுற்றும் எறும்பு போல் 165
எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய்
தெங்காகாதது போல்
எமன் கையிலகப்பட்ட உயிர் போல
எமன் கையிலிருந்து மீண்டது போல
எரிமண்டிக் கானந் தலைப்பட்ட தீப் போல்
எரி முன்னர் வைத்தூறு போல் 170
எரிகிற கொள்ளியை எறத் தள்ளினது போல்
எரிகின்ற புண்ணில் ஈட்டி வைத்தாற் போல
எரிப்படு பஞ்சு போல்
எருது கோபங்கொண்டு பரதேசம் போனது போல்
எருமை மாட்டின்மேல் மழை பெய்தது போல் 175
எலிக்குப் பயந்து வீட்டுக்குத் தீ வைத்தது போல்
எலிபிடித் தலைக்கும் சிறு பூனை போல
எலியும் பூனையும் போல்
எலுமிச்சங் காய்க்குப் புளிப்பு எற்றுகிறது போல்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல் 180
எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்
எழுத்தறியாதவன் எட்டைச் சுமந்தது போல
எள்ளாட்டியவழி யல்லாது எண்ணெய் புலப்படாதவாறு போல
எள்ளுக்காய் பிளந்தாற் போல
எள்ளுக்குள் எண்ணெய் போல 185
எள்ளும் பச்சை யரிசியும் போல்
எறும்புப் புற்றில் பாம்பு குடிகொள்வது போல்
ஏகா சிக்கு மா இடித்தாற் போல
ஏணி கோணி நாரத்தங்காய் போல்
ஏதிலார் குற்றம் போல் 190
ஏமிழல் இட்டு மலர் காய்கனிகள் ஈந்ததவும்
நல் மரத்தைக் கட்டும் உடைமுள் போல்
ஏறவிட்டு ஏணியை வாங்கினது போல

ஏரு மடைக்கு நீர் பாய்ச்சுகிறது போல
ஐயம் புகும் தவசி கடிஞை போல்
ஒட்டைக்குப் பளுவு ஏற்றுகிறது போல் 195
ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டியது போல
ஒரு அச்சிலே உருக்கி வார்த்தாற் போல
ஒரு சிறு மயிரிழக்கினும் மாயுங் கவரிமாப்போல
ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல
ஒரு நாய் குலைப்பதைக் கண்டு தெருநாய்களெல்லாம் சேர்ந்து
குலைப்பது போல் 200
ஒருநாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தாற் போல்
ஒருமைப் பாடில்லாத குடி போல
ஒல்லை இடுநீற்றால் பையவிந்த நாகம் போல்
ஒவ்வாக் காலத்து உயர்மரம் பழுத்த துவ்வாக் கனிபோல்
ஒளிமிளிர் கற்களைப் பைம்பொனிற் பதித்தாற் போல 205
ஒளியைக் கண்ட இருள் போல்
ஒளியைக்கண்ட விட்டிற் பூச்சி போல
ஓசையவிந்த பின் ஆடுதுமென்றாற் போல
ஓடி மறைகின்ற மின்னலைப் போல
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குதல் போல 210
ஓட்டை நாழிக்குப் பூண் கட்டினது போல்
ஓராவிற்கு இருகோடு தோன்றினாற் போல
கவ்வையிற் படர்ந்தாலும பேய்ச் சுரைக்காய் நல்லதாகாதது போல
கடலைக் கையினால் நீந்திக் கரையேறுதல் போல
கடல் மணலைக் கணக்கிடுதல் போல 215
கடல் திரையை எண்ணுதல் போல
கடலிடைப் பிறந்த முத்து அக்கடலுக்குப் பயனாகாமை போல
கடலிற் காயம் கரைத்தது போல
கடலின்கண்ணே இயங்கும் மரக்கலத்தைப் போல
கடல் உப்பையும மலைநெல்லையும் கலந்தாற் போல 220
கடல் வெதுப்பின் வளாவும் நீர் இல்லாதது போல்
கடன்பட்டார் நெஞ்சம் போல்
கடாக் களிற்றின்மேல் கட்படாம் போல
கடாவும் கடாவும் சண்டைபோடும்போது உண்ணி நசுங்கினாற்போல
கடுகைத் துளைத்து எழ்கடலைப் புகட்டினாற் போல 225
கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற்
போல

கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது போல
கட்டாந் தரை அட்டை போல
கட்டுக் கடங்காக் காளைபோல
கட்டிமேற் சிலந்தி எழுந்தாற் போல் 230
கண்கெட்ட குருடர் போல்
கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் செய்வது போல
கண்டு மறைந்த கனவினைப் போல
கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவிபோல
கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்தது போல் 235
கண்ணில்லார் பெற்றிழந்தாற் போல்
கண்ணினைக் காக்கும் இமை போல
கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போல
கண் பறி கொடுத்துக் கலங்கினார் போல
கத்தரிகாய்க்குக் காலுங் கையும் முளைத்தாற் போல 240
கயிறு இல்லாப் பம்பரம் போல
கரடி புற்றிலே வாய் வைத்தாற் போல
கரதலாமலகம் போல்
கரு இல்லாத வித்தையும் குரு இல்லாத சீடனும் போல
கருங்காலிக்கட்டைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல 245
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல
கருடனைக் கண்ட பாம்பு போல
கருவரைமேற் சூடே போல்
கருப்பஞ்சோலையிலே நெருப்புப்பொறி விழுந்தாற் போல
கருமருந் தறையிற் சிறுபொறி சிதறினது போல 250
கரும்பாலையிற் பட்ட எறும்பு போல
கரும்பிருக்க இரும்பு கடித்து எய்த்தாற் போல
கரும்பு தின்னக் கூலி கேட்டாற்போல
கரும்பு தின்னாமல் வேம்பு தின்பது போல
கரும்பூர்ந்த சாறு போல 255
கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம்போல
கரை இழந்த தடாகம் போல்
கரை காணாத கப்பலைப் போல்
கரை தட்டின கப்பல் போல
கலங்கரை விளக்கம் போல் 260
கலப்பாலில் ஒரு துளி நஞ்சு கலத்தல் போல
கலனழிந்த கைம்மையார் பெண்மை நலம் போல

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தாற் போல
கல்லிலே நார் உரிக்கிறது போல
கல்லின் மேலிட்ட கலம்போல் 265
கல்லைக் குத்திக் கைநொந்தாற் போல
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம் போல்
கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்று
கழுதை பொதிசுமந்தாற் போல்
கழுதைப் பால் குடித்தவன் போல் 270
கழுதையும் குதிரையும் பிணைத்தாற் போல
கழுதையைக் கட்டி ஓமம் வளர்த்தது போல
கறவை நிற்க மலடு கறந்து உளந்தளர்தல் போல்
களையறியா விளை நிலம்போல
கற்பாறைமேல் விழுந்த மழைத்துளி சிதறுவது போல 275
கற்பிளப்பில் தீயே போல்
கற்றுமனம் போல்
கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினள் பெற்றுக்கொடுத்த தலை
கனகமாரி பொழிந்ததுபோல
கனல் முன் இட்ட மெழுகுப் பாவைப்போல் 280
கனியிருக்கக் காயை விரும்புவது போல
கன்மேற் செதுக்கிய எழுத்தைப் போல
கன்றினைக் கண்ட பசுப்போல
கன்றுடைத் தாய் போல
கன்றைப் பிரிந்த ஆன் போல 285
கன்றை விட்டுக் கட்டுத் தறியைப் பிடிப்பது போல
காகத்தின் இருகண்ணிற் கலந்து நின்ற ஒரு மணி போல்
காகம் உறவு கலந்துண்பது போல
காக்கை யேறிப் பனம்பழம் விழுந்தது போல
காடிக்குப் போய்த் தயிர்கொண்டு வந்தது போல 290
காட்டுக்கு எறித்த நிலாப்போல
காட்டுத் தீ முன்னர்ப் பஞ்சுத் துய்போல
காணாதது கண்டாற் போல
காதலனைக் கண்ட கற்புடையாள் போல
காதோடு காதுவைத்தாற் போல 295
காந்தம் இரும்பைப் பற்றுவது போல
காந்தம் இழுத்த ஊசியைப் போல
காந்தள் மொட்டுப் போல

காந்தனில்லாத கனங் குழலாள் பொற்புப் போல்
காம்பிலா மூழை போல 300
காயும் புழுவிற்குச் சாயும் நிழல் போல
காய்கள் பலபலக் காய்த்தாலும் அவற்றைத் தாங்கிக்கொள்ளுங் கிளைகள் போல்
காய்த்த பலாவின் கனியுண்ண மாட்டாமல் ஈச்சம்பழத்துக்கு இடருற்றது போல
காய் முற்றினால் தீங்கனி யாதல் போல
கார்த்திகைப் பிறை கண்டவன் போல் 305
கார் மருங்கின் மின்னுப் போல
காலத்திற் பெய்த மழை போல
காலில் பட்டது கண்ணிற் பட்டதுபோல
காவிரிக் கரைப் பசப்போல்
காற்றின் வாய்ப்பட்ட பூளைமலர் போல 310
காற்றுடன் நெருப்புக் கூடினாற் போல
கானலைச் சலமாய்க் கண்டதுபோல
கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது போல
கிணற்றிலே கல் போட்டது போல
கிணற்றுத் தவளை போல் 315
கிண்டி விட்டுக் கேளிக்கை பார்க்கிறது போல்
கிளந்தவா கிளத்தல் கிளியினதியல்பு போல
கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பது போல
கிள்ளுக் கீரை போல
கீரியும் பாம்பும் போல 320
கீரி வாய்ப் பாம்பு போல
கீழே பாம்பென்றால் மேலே பார்க்கிறவன் போல
குங்குமஞ் சுமந்த கழுதை போல
குடங்கருட் பாம்போடு உடனுறைந்தற்று
குடத்துள் விளக்குப் போல 325
குடல் கூழுக்கழக் கொண்டை பூவுக்கழுவது போல
குடியிருக்கும் வீட்டின் கூரையைப் பிடுங்குவது போல
குட்டிச் சுவரிலே தேள் கொட்டத் தண்ணீர் மிடாவில் நெறி கட்டினது போல
குட்டி போட்ட நாய் போல
குதிரை கீழே தள்ளிப் போட்டதுமன்றி மேலே ஏறியுமிதித்தது போல 330

குப்பையிற் கிடந்தாலும் மாணிக்கத்தின் பெருமை குறையாதவாறு போல
கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல
கும்பிட்ட கோயில் தலைமேல் இடிந்து விழுந்தாற் போல்
குயில் குரலும் மயில் அழகும் போல
குயில் கூவினாற் போல் 335
குரங்கின் கைக் கொள்ளி கொடுத்தாற் போல
குரங்கின் கையில் சிக்கிய பாம்பு போல
குருடன் இராசவிழி விழித்தாற் போல
குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்து வழிகாட்டுவது போல்
குருடன் இருளுக் கஞ்சுதல் போல 340
குருடன் கைக் கோலைப் பிடுங்கினது போல
குருடும் குருடும் குழிவிழுந்தாற் போல்
குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற் போல
குருட்டுக் கோழி தவிட்டுக்கு வீங்கினது போல
குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தது போல 345
குருத்தின் கரும்பு தின்றாற் போல
குருவி கழுத்தில் தேங்காயைக் கட்டினது போல
குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பு போல
குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற் போல
குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது போல 350
குழியில் வீழ்ந்த யானை போல
குளத்தின்மேல் கோபித்துக்கொண்டு கால் கழுவாமல் போனது போல்
குளம் வெட்டப் பூதம் புறப்பட்டது போல
குளவிக் கூட்டைக் கோலால் குலைத்தாற் போல
குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டது போல 355
குளிர்பூஞ்சோலை வழியிருக்கக் குழியில்விழுந் தனறுபாய்தல் போல்
குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்தது போல்
குறிச்சி புக்க மான் போல
குறுஞ்சிரிப்புக்கு மருந்து சாப்பிட உள்ள சிரிப்பும் போனாற்போல
குறை குடம் கூத்தாடுவது போல 360
குன்றிமணி யிடத்திலும் கறுப்புண்டாயிருப்பது போல்
குன்று கண்டு குலைக்கும் நாய்போல
குன்றுமுட்டிய குரீஇப்போல

குன்று மேலிட்ட விளக்கைப் போல
கூட்டத்திற் கட்டுச்சோறு அவிழ்த்தாற் போல 365
கூத்தாட்டவைக் குழாம் போல
கூத்துப் பார்க்கப் போன இடத்தில் பேய்பிடித்தது போல
கூவலாமை குரைகடலாமையைக் கூவலோடொக்குமோ கடல்
என்றல் போல
கூற்றத்தைக் கையால் விளித்தற்று
கேடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற்போல 370
கெண்டையைப் போட்டு வராலை இழுத்தாற்போல்
கைக்கும் மருந்தைக் கருப்பங்கட்டியிற் பொதிந்து அருந்தல் போல
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்புப் போல
கைபுனை யாக்கில்லைக் கதழெரி சூழ்ந்தது போல
கைப்பழத்தைப் போட்டுவிட்டுத் துறட்டுப்பழத்துக்கு ஆசைப்
பட்டது போல 375
கையாடாத ஆயுதம் துருப் பிடிப்பது போல
கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போல
கொடுக்கிலாதானைப் பாரியே என்பது போல
கொல்லன் உலையூதுந் தீயே போல்
கொழுகொம்பற்ற கொடிபோல 380
கொழுச் சென்றவழித் துன்னூசி செல்லுமாறு போல
கோடை இடி குமுறினாற் போல
கோடை யிடியும் மழையும் போல
சகடக் கால் போல
சணப்பன் வீட்டுக் கோழி தானே
விலங்கில் மாட்டிக் கொண்டதுபோல 385
சந்நியாசி பூனை வளர்த்தது போல
சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல
சருக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போல
சாடிக்கு வாய்த்த மூடி போல
ச டிற் கறங்கிடும் பம்பரம் போல் 390
சாந்துணை யில்லாதார் தவம் போல்
சாறு பிழிந்த கனி போல
சிங்கத்தின் காட்டைச் சிறுநரி வளைத்தாற்போல
சிட்டுக்குருவி தலைமேல் பனங்காயைக் கட்டுவது போல
சிட்டுக் குருவிமேல் பாரதந் தொடுத்ததுபோல் 395
சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை மலர் போல

சித்திரப் பதுமை போல
சிவபூசை வேளையிலே கரடி புகுந்தாற் போல
சிறகு இழந்த பறவை போல
சிறிய கண்ணாடியில் பெரிய மலையைக் காண்பது போல 400
சிறியவன் செல்வம் போல்
சிறியார் கைச் செம்பொன் போல
சிறியார் மணற் சோற்றில் தேக்கிடுமா போல்
சிலையில் எழுத்துப் போல
சிறைபெறு நீர் போல் 405
சிற்றருவிகள் பலவுஞ் சென்று ஓர் யாற்றில் கலத்தல் போல
சீதேவியுடன் கூட மூதேவி பிறந்தாற் போல
சுடச் சுடரும் பொன்போல
சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாதது போல்
சுத்தமான துணியில் சாயம் ஏறுவது போல 410
சும்மா வந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பது போல
சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல
சூரியனைக் கண்ட தாமரைபோல
சூரியனைக் கண்ட பனிபோல
சூரியனைப் பார்த்து நாய் குரைத்தாற் போல 415
செங்கதிரின்முன் மதியந் தேசடங்கி நின்றிடல் போல்
செங்கமலப் போதலர்ந்த செவ்விபோல்
செந்தீயினிடைப் பொரிந்து தெறித்த பொரிபோல்
செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றுமச் செந்
நெல்லேயாகி விளைவது போல்
செப்பின் புணர்ச்சி போல 420
செய்யாட் கிழைத்த திலகம் போல
செவிடன் காதில் சங்கு ஊதியது போல
செறித்திடுஞ் சிறையினை உடைத்திடும் புனல் போல்
சேக்கை மரன் ஒழிய சேண் நீங்கு புள் போல
சேணிங்கு புட் போல் 425
சேற்றிலே செங்கழுநீர் பூத்தாற்போல
சேற்றிலே நட்ட கம்பம் போல
சேற்றிலே முளைத்த செந்தாமரை போல
சொறியக் கொடுத்த பசப் போல
சோற்றைப் போட்டுத் தொண்டையை நெரிப்பது போல 430
ஞாயிறில்லை யெனும் பிறவிக் குருடன் போல

நகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட ஓவியம் போல
தங்கக் கம்பி போல
தங்கத்தை உருக்கிவிட்டது போல
தடங்கரை பேர்த்து வெள்ளத்தை விடுதல் போல 435
தடற்றுள் வாள் போல்
தண்ணீரில் தத்தளிப்பவனுக்குச் சிறு துரும்பு கிடைத்தாற் போல
தண்ணீரும் பாசியும் கலந்தாற் போல
தரித்திரனுக்குப் புதையல் கிடைத்தாற் போல
தலைக்கடை நாய் போல 440
தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போல
தவிடு தின்பவனை அமுது தின்னச் சொன்னாற் போல
தழலது கண்ட மெழுகது போல
தழலிற் படு தளிர் போல்
தன் கை தனக்குதவுமாறு போல 445
தன்னை நம்பி உடன் கிடந்தவனை மடிதடவின வனைப் போல
தாடிபற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டதுபோல்
தாமரைக் கொட்டையின் அல்லியே போல
தாமரைப் பொய்கையிற் புகும் தனிப்பேடைபோல்
தாமரை யிலை நீர் போல் 450
தாயில் கழுதையில் அண்டம் சுமந்தாலும் போல்
தாயில் தாவாக் குழந்தை போல
தாயின் துணையை எதிர்நோக்கும் குழந்தையைப் போல
தாய்கூடப் பிறந்த மாமனிடத்தில் குலங் கோத்திரம் பேசியது போல்
தாய்ப்பாலில்லாத குழவி போல 455
தாய்ப்பாலுள் நஞ்சு ஆய்பவர் போல
தாரகை நடுவண் தண்மதி போல
தானாய் வருகிற சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவது போல
திங்கள் கண்ட கடல் பொங்குவது போல
திரிசங்கு சுவர்க்கம் போல 460
திருடனைத் தேள் கொட்டினது போல
திருட்டு நாய்க்குச் சதங்கை கட்டினாற் போல
திரையிலாக் கடல் நீர் போல
தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்ப்பது போல்
தீயினாற் சூழப்பட்ட வீடு போல 465

துஞ்சுபுலி இடறிய சிதடன் போல்
துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தாற் போல
தும்பைவிட்டு வாலைப் பிடிப்பது போல
துரும்பு பற்றிக் கடல் கடக்குந் துணிபு போல
துரும்பு பெருத்துத் தூணானாற்போல் 470
தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினது போல
தூண்டா விளக்குப் போல்
தூண்டில் நுனி மச்சத்துக்கு ஆசைப்பட்டு உயிரிழக்கும் மீன் போல்
தூண்டிற்காரனுக்குத் தக்கைமேற் கண்போல்
தூண்டிலின் மீன் போல 475
தூய இளம்பச்சிலையைத் டேம் அறப்பற்றி அரிப்பதுபோல
தூரின் கரும்பு தின்றாற் போல
தென்றல் முற்றிப் பெருங்காற்றானாற் போல
தேடிப்போன மருந்து காலில் அகப்பட்டது போல்
தேரை குடித்த தேங்காய் போல 480
தேறுபடு சென்னீர் போல
தோடக்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும் கல்வி போல
தொடு மணற்கேணி நீர் சுரப்பது போல
தொட்டனைத் தூறு மணற்கேணிபோல
நஞ்சு தலைக் கேறியது போல 485
நடு ஊரில் ஒரு நன்மரம் பழுத்தாற் போல
நடுக்கடலில் கப்பல் உடைந்ததோடு தெப்பமும் உடைந்தாற்போல
நடு ஊருள் நச்சுமரம் பழுத்தாற் போல
நடுவூருள் வேதிகை சுற்றுக் கோட்புக்க படுபனை போல்
நடைத் தூக்கங் கொண்டவன் போல் 490
நண்டு கால் விரித்தாற் போல
நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தாற்போல
நண்பகல் வெயிலிற்பட்ட புழுப்போல
நண்பனுக்கு நண்பன் கண்ணாடி போல
நம்பினோரை நட்டாற்றிற் கைவிடுதல் போல 495
நரிப்படைக் கொரு பாகும் போல
நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்க்கிறது போல
நரியைக் குதிரை செய்வது போல
நல்ல பால் கலத்தீமையால் கெட்டுப்போவது போல்
நல்ல மரத்திலே புல்லுருவி பாய்ந்தது போல 500

நவில்தொறும் நூல்நயம் போல
நள்ளிருட் காலம் போல
நறுநெயுறு குடத்து எறும்பு நண்ணல் போல
நறுந்தாதுண்டு நயனில் காலை வறும்பூத் துறக்கும் வண்டுபோல
நன்மணி யிழந்த நாகம் போல 505
நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவை போல்
நா இன்புற நக்கிக் கொல்லும் கவயமாப் போல்
நாடு மகவுக் குதவும் நற்றாய் போல
நாணறுந்த வில் போல்
நாணுக்கு வில் போல 510
நாண்வழிக் க சு போல
நாப்பாடஞ் சொல்லி நய முணர்வார் போல்
நாயும் ஞளிச்சட்டியும் போல
நாயும் பூனையும் போல்
நாய்க்குத் தவி சிட்டாற்போல 515
நாய்பெற்ற தெங்கம் பழம்போல
நாய் வாலைப்பற்றி நதி கடத்தல் போல
நாய் வெற்றெலும்பைக் கடித்துக் கடித்து இன்புறுதல்போல்
நாராசத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றினாற் போல
நிதியஞ் சொரிந்த நீவி போல 520
நிலத்து அறைந்தவன் கை பிழையாதற்று
நில நலத்தால் நந்திய நெல்லே போல்
நிறைந்திருந்த தோர் கொள்கலம் பிறிதொன்றற்கு
இடங் கொடாதது போல்
நீரொழியப் பாலுண் குருகினைப் போல்
நிறுத்தறுத்துச் சுட்டுவைத்துப் பொன் கொள்வான் போல் 525
நிறை பொதியிலே கழுதை வாய் வைத்தாற் போல
நீரற்ற விடத்திலே ஆம்பல்தான் வாடலே போல்
நீரிடைப் பாசி போல்
நீரின்றி அமையாத உலகம் போல
நீருடைநிலத்து நிவந்த நீண்மண மரம் வெப்பத்
தால் தெறப்படாதது போல 530
நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னம் போல
நீர்க்குமிழி போல்
நீர்க்குள் பாசி போல்
நீர்மருங்கின் கொடிப் போல

நீர்ச்சுழியி லகப்பட்ட வண்டு போல 535
நீர்மேல் எழுத்துப் போல
நீர்வழிப் படூஉம் புணைபோல்
நீர்வழி யிதவைபோல
நீள்வெளிற் கானத்தில் நல்ல நீர்த்தடம் போல
நீறுபூத்த நெருப்புப் போல 540
நுணலுந் தன் வாயாற் கெடுவது போல
நுனிக்கிளையி லேறி அடிமரத்தை வெட்டுவதுபோல
நுனிக்கொம்பேறி அஃதிறந் தூக்கினாற் போல
நுனிப்புல் மேய்ந்தாற் போல
நுனியின் கரும்பு தின்றாற் போல 545
நூலில்லாமல் மாலை கோத்தது போல
நூலும் மணியும் போல
நெஞ்சு நோமென்று தலை துமிப்பான் தண்ணளிபோல்
நெடுஞ்சுரத்து நின்ற தனிமரம் போல
நெடுஞ்சுழிப்பட்ட நாவாய் போல 550
நெய்யில்லா உண்டி போல்
நெருப்பிடை நெய் சொரிந்தாற் போல
நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல
நெல்லினின்றும் பதரை வேறாகப் பிரிப்பது போல
நெற்குத்தி யுண்ணாது உமிக்குத்திக் கைசலித்தாற் போல 555
நெற் செய்யப் புற் றேய்ந்தாற் போல
நோயாளிக்கு ஆசை வார்த்தை சொன்னாற் போல
நோயாளி தலைமாட்டில் பரிகாரி இருந்து அழுதாற் போல
நோயுண் மருந்து தாயுண்டாற் போல
பகலவன் முன்னர்ப் பாயிருள் மாய்ந்தாற் போல 560
பசித்த கணக்கன் பழங்கணக்குப் பார்த்தாற்போல
பசித்துண்பவனைப் போல
பசியாதிருக்க மருந்து கொடுக்கிறேன் பழையது இருந்தால் போடு என்பது போல
பசியா வரம் படைத்த தேவர் போல
பசுத்தோல் போர்த்த புலிபோல் 565
பசுமட் கலத்துள் நீர் போல
பசுமரத்தாணி யறைந்தாற் போல
பசு வால் பற்றி நதி கடத்தல் போல
பசுவுண்ட தெண்ணீர் தேம்படு அமுதம் போல

பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்தாற்போல 570
பச்சை மஞ்சளைப் பிளந்தாற் போல்
பச்சை மரத்திற் பேரிடி விழுந்தாற் போல
பஞ்சப் பொதியில் நெருப்புப் பட்டாற்போல
படிப்பில் ஆசைவைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போல்
படை கொண்டார் நெஞ்சம் போல் 575
பட்டப்பகலிலே விண்மீன் கண்டாற்போல
பட்டப் பகல் போல
பட்டி மாட்டுக்குக் கட்டை கட்டினது போல
பண்ணமைத் தெழுதப்பட்ட பாவை போல்
பயன்மரம் உள்ளூரில பழுத்தாற் போல 580
பயிரிடைப் புற் களைந்து நெற்பயன் கொள்ளும் ஒருவன்போல்
பரிதி கண்ட பங்கயம் போல
பருகற் கமைந்த பால் நீரளாயது போல்
பருத்தி புடைவையாய்க் காய்த்தது போல
பருந்தின் வழி நிழல்போல 585
பலசரக்குக் கடைக்காரனைப் பயித்தியம் பிடித்தது போல
பல மீனினது நடுவே செல்லும் மதியத்தைப் போல
பலாப் பழத்தில் மொய்த்த ஈப் போல
பல்லுப் பிடுங்கின பாம்பு போல
பல்லற்ற பாம்பு போலும் கொடுக்கற்ற தேள் போலும் 590
பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடல் போல்
பழங்கள் பெருக்கப் பெருக்கக் கிளைகள் தலைகுனிவது போல்
பழந் தேர் வாழ்க்கைப் பறவை போல்
பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல்
பழம் பழுத்தால் கொம்பில் தங்காதது போல் 595
பழுமரம் நாடிய பறவை போல
பழைய தரித்திரனுக்குப் பணம் கிடைத்தாற் போல
பள்ள உவர்க்கடலில் பாய்ந்தோடும் வெள்ளம் போல்
பள்ளத்து வழி வெள்ளம் போல்
பறக்கிற பட்சிக்குச் சிறகு ஒடிந்தாற் போல 600
பறைபட வாழா அசுணமாப் போல
பறை யறைந்தாற் போல
பனியை நம்பி ஏர் பூட்டினது போல
பனை ஏறி விழுந்தவனைக் கடா ஏறி மிதித்தது போல்

பனையிலிருந்து விழுந்தவனைப் பாம்பு கடித்தது போல் 605
பன்னீர் நடுவட் பான்மதிபோல
பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கே போல
பாசிலைப் பந்தர் வேய்ந்தாற் போல
பாச்சி பாச்சி என்றாலும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்பது போல
பாய்மரச் சுற்றிலகப்பட்ட காக்கை போல் 610
பாம்பின் தலை நக்கியது போல
பாம்பின் வாய்த் தேரை போல
பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையுங் காட்டும் விலாங்கு மீனைப் போல
பாம்புக்குப் பால் வார்த்தாற் போல்
பாம்புக்கு மருந்து கேட்கத் தேளுக்கு மந்திரித்தது போல 615
பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாதல் போல
பாய்மரக் கொடி போல்
பாலிற் படு நெய் போல
பாலுக்குப் பூனையைக் காவல் வைத்தது போல
பாலுடன் கூடிய நீர் போல 620
பாலுண்ணுங் குழவி கையிருப்ப மல்யுத்தஞ் செய்பவர் போல
பாலுந் தேனுஞ் சேர்ந்தாற் போல
பாலைப் பருகாது கள்ளைக் குடிப்பவர் போல
பாலோ டளாயநீர் பாலாகு மல்லது நீராய் நிறந்திரிந்து தோன்றாதது போல
பால் நினைந்தூட்டுந் தாய் போல 625
பாவிடை யாடு குழல் போல்
பாழடைந்த பழங்குட்டிச் சுவர்போல
பாழுக் கிறைத்த நீர் போல
பாற்கடற் பனி மதி போல்
பாற்கூழை மூழை சுவை யுணராதது போல் 630
பிஞ்சிலே பழுத்தாற் போல
பிடித்த கொம்பும் ஒடிந்து, மிதித்த கொம்பும் ஒடிந்தாற்போல
பிட்டுத் தின்று விக்கினாற் போல
பிரிவரிய ஊசி வழிப் பின்றொடரும் நூல்போல
பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டது போல் ()
பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரச மரத்தையும் பிடித்தது போல
பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதை போல
பிள்ளையில்லாச் செல்வங் கள்ளியின் சோறே போல

பிறர்மண் கொள்வான் சென்று தம் மண்ணும் இழத்தல் போல்
பிரையுறு பால் போல 640
புடத்தின் மாற்றுயரும் பொன்னே போல
புண்ணிலே கோல் இட்டது போல
புதல் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று
புதுக்குடத்தில் வார்த்த தண்ணீர் போல்
புது மணவறைப் பெண்போல 645
புது வெள்ளம் போல
புதையல் காத்த பூதம் போல
புதையல் எடுத்தவனைப் போல
புயற்காற்றினால் அசைக்கப்படாத குன்றுபோல
புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற் போல 650
புலி முழக்கங் கேட்ட புல்வாய் போல
புலிப்பால் குடித்தவன் போல்
புலியும் பசுவும் பொருந்தி வாழ்ந்தாற் போல
புலியைக் கண்ட மான் போல
புலியைப் பார்த்து நரி குடிட்டுக் கொண்டது போல் 655
புல் நுனிமேல் நீர்போல
புளிக்கண்டார்க்குப் புனலூறுமா போல்
புளியந்தோடும் பழமும் போல
புள்ளுக்குப் புன்னை இருப்பிட மாயினாற் போல
புற்றிலே ஈசல் புறப்பட்டது போல 660
புற்றிலே கிடந்த புடையன் எழும்பினது போல்
புனல் ஓடும் வழியில் புத் சாய்ந்தாற் போல்
புனையா ஓவியம் போல
பூட்கை யில்லோன் யாக்கை போல்
பூட்டும் திறப்பும் போல 665
பூமி ஆளலாமென்று மணப்பால் குடிக்கிறது போல
பூவரசின் பழுப்புப் போல
பூவாதே காய்க்கும் மரம் போல
பூவினிற் பொலிகின்ற கந்தம் போல்
பூவும் மணமும் போல 670
பூவுடன் கூடிய நாரும் மணம்பெற்றாற் போல
பூனைமுன் கிளி போல
பூனைவாய் எலி போல
பெருக்காற்று இடிகரை போல

பெருங்காய மிருந்த குடுக்கை வாசனை போகாதது போல 675
பெற்ற இளங்கன்றைப் பிரியாமற் பின்றேடிச் சுற்றும் பசப்போல்
பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போசனம் செய்வித்தது போல
பேய்க்கு வேப்பிலை போல
பேய் பிடித்தவன் செயல் பேய்ச்செயல் போல
பொம்மலாட்டுவக்கும் தோலுருப் போல 680
பொதிமாடு சுமந்தாற் போல்
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிதல் போல
பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லாது இழிந்தவை காமுறூஉம் ஈப்போல்
பொள்ளற் குடத்தில் வார்த்த தெள்ளமுதம் போல 685
பொறியறு பாவை போல்
பொற்குன்றஞ் சேர்ந்ததோர் காக்கை பொன்னுதல் போல
பொன் காத்த பூதம் போல
பொன்படைத்தான் தன்னுல் பொன்னுக்குப் பயன் இல்லாதது போல்
பொன்னுடை விரித்தாற் போல 690
பொன்னுற் செய்த பூங்கொடி போல
பொன்னின் கலம் சுட்டறிவது போல
பொன்னின் விளக்கானுலும் தூண்டுகோல் வேண்டுவது போல
போர்முனையிலே ஆயுதந் தேடுகிறது போல
போன சனியனைத் தாம்பூலம் வைத்தழைத்தாற் போல 695
போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தாற் போல
மகத்திற் புக்கதோர் சனி போல
மங்குலைக் கண்ட மயில் போல
மஞ்சு சூழ்ந்த மதிபோல
மடுத்தவாயெல்லாம் பகடு போல 700
மடைதிறந்த வெள்ளம் போல்
மடைவாய்க் கொக்குப் போல
மட்குடத்து உள நீர் கசிவது போல
மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்தாற் போல
மணமுற்ற பொன்மலர் போல 705
மணற் சோற்றிற் கல் ஆய்வது போல
மணிக்கலம் கதுவாய்ப் பட்டது போல்
மணியும் ஒளியும் போல்
மண் குதிரையை நம்பி ஆற்றி லிறங்கியது போல

மண்ணின் குடம்போல 710
மண்மான் புனை பாவை போல்
மதங்கொண்ட யானையைப் போல
மதிக்கண் மறுப் போல
மதியைப் பிரிந்த வான் போல
மதின்மேல் எறின பூனைபோல 715
மதுவுண்ட குரங்கு போல
மத்தெறி யுடை தயிர் போல
மத்திட்ட தயிர் போல
மயிர் கட்டுக் கரியாகாதது போல
மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற் போல 720
மரபு அறியாதவன் மணம்பேச வந்தாற் போல
மரம் பழுத்தால் வௌவாலை வா வென்று கூவியழைப்பார் வேண்
டாமை போல
மலத்தைக் கண்ட நாய்க்கு வாயூறுவது போல
மலைப்பாம்பு புரள்வது போல
மலையாடு மஞ்சு போல் 725
மலையும் மலையும் மோதினாற் போல
மலைமிசைத் தோன்றும் மதியம் போல்
மலைமிசை விளக்குப் போல
மலையுடன் மண்ணாங்கட்டி எதிர்ப்பது போல
மல்லாந்து படுத்து எச்சில் உமிழ்வது போல 730
மழைக் கொண்டலில் மின்னுப் புக்கு ஒளித்தாற் போல
மழைமுகங் கண்ட பயிர்முகம் போல
மன்றத்துப் புன்னை போல்
மாரிக்காலத்து மழை போல
மாரிக்கால மதிபோல 735
மாங்கலத்திற்கு பணிவிளக்குப் போல
மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே என்றல் போல்
மின்மினி ஒளி போல
மின்னொளி தோன்றி மறைந்தாற் போல
மீகாமனில்லா மரக்கலம் போல 740
மீனை மீன் விழுங்கினாற் போல
முக்கால் பணத்துக் குதிரை மூன்று பணத்துப் புல் தின்றாற்போல
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல
முட்பூவிற் றேன் போல்

முதலை பிடித்தது போல 745
முயலைவிட்டுக் காக்கைப்பின் போனது போல
முயற்கொம்பு போல
முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது போல
முறுக்கிய கயிற்றினால் விடுக்கப்படும் பம்பரம்போல்
முன்சிறுமை யடைந்து பின் செல்வத்தைப் பெற்றவன் அச்
செல்வத்தைப் பாதுகாப்பது போல 750
மூட்டுப் பூச்சி போல
மூழை உப்பறியாதது போல்
மேருவிட்டது போல
மெல்ல இருப்பினும் சாவிருந்தது போல
மேட்டுக்கு விதைத்த விதை போல் 755
மொட்டைத் தலைச்சியைக் கூந்தலழகி என்பது போல
மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது போல்
மோத்தையைக் கண்ட காக்கை போல்
மோப்பக் குழையும் அனிச்ச மலரைப் போல
மோர் சுடுகிறதென்று ஊதிக் குடிக்கிறது போல 760
யாப்புடைக் காழும் இருக்கும் போல
யாற்றொழுக்குப் போல்
யானைக்குமுன் பூனை போல
யானை தின்ற விளாங்கனி போல
யானைமேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்பது போல 765
யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லுவது போல்
யானையால் யானை யாத்தற்று
வண்டினம் பூத்தொழி கொம்பின்மேற் செல்லாதது போல்
வதங்கிய இலைகளின் நடுவே ஓர் இளந்தளிர் தோன்றுதல் போல
வயிரம் செறிப்பினும் பன்றி செயிர் வேழமாகுதல் இல்லாததுபோல
வலையிற் சிக்கிக்கொண்ட மான் போல
வலையினின்றும் தப்பியோடும் மானைப் போல்
வழிகாட்டுங் கைகாட்டிகள் போல
வழிநடை வார்த்தை வாகனம் போல்
வழுவி விழுவோனைச் சடிதியில் ஒருவர் தாங்கினாற் போல 775
வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது போல
வளர் மதியம் போல்
வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று
வறியவன் இளமை போல

வறுத்த பயறு முளைத்தாற் போல 780
வற்றக் காய்ச்சிய கன்னற்பாகு போல
வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தற்று
வாடு பயிர்க்கு வருமாமழை போல
வாணிக முதல் போல
வாய் காய்ந்த புலி ஆள்மேலே விழுந்தது போல் 785
வாய்க் கொழுப்புச் சீலையில் வடிந்தது போல
வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அணைந்தது போல
வாலில்லாத குரங்கு போல
வாழுகிற பெண்ணைத் தாயார் கெடுத்தது போல்
வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல 790
வாழை மேலே குளிர்ந்து உள்ளே வெப்பங் காட்டுவது போல்
வானத்தின மீனுக்கு வன்றூண்டி விட்ட வகையது போல்
வானத்தின் மீனைக் கணக்கிடுதல் போல
வானூர் மறியம் போல்
வான் நிழல் போல் 795
வான் முழலும் மின்னும் வறு நிலத்து விழாதது போல்
விச்சதின்றி விளைவு செய்வது போல்
விண்ணினின்றும் இறங்கிய மின்கொடி போல
விண்மீன் நடுவிற் செல்லுந் தண்மதி போல
வித்துக்கு விட்ட சுரைக்காய் போல 800
விரிதலைப் பேய் போல
விரிவெயிலில் விளக்கொளி போல
விலங்கை விட்டுக் கொழுவில் மாட்டிக்கொண்டது போல்
விழலுக் கிறைத்த நீரே போல்
விழுந்த சுவரிலே கை வைத்தாற் போல 805
விழுகிற பிள்ளைக்கு அரிவாள் அண்டை கொடுத்தாற் போல
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறு போல
விளக்கிலா இடத்தில் வெளிச்சம் இராதது போல
விளக்கிலே மொய்த்த விட்டில் போல
விளக்கின் முன் இருள் போல 810
விளக்கு நெய் தேய்விடத்து சென்றிருள் பாய்ந்தது போல்
விளக்குப் புக இருள் மாய்ந்தது போல
விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போல்
விளக்கொளிக்கு ஆசைப்பட்ட விட்டில் போல
விளையாட்டுச் சண்டை வினைச்சண்டை யானது போல் 815

விளையும் பயிர் முளையிலே தெரிவது போல
வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடிவைத்தது போல்
வெங்காயச் சருகு போல
வெண்கலக் கடையில் மதயானை புகுந்தாற் போல
வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போல 820
வெந்த புண்ணில் வேலெறிந்தாற் போல
வெய்யிலில் பட்ட புழுப் போல
வெய்யோன் வெயில் முன் எரிதீபம் போல்
வெள்ளிடை மலை போல
வெள்ளந் தடுத்தல் அரிதே போல 825
வெள்ளிவெண் குடத்துப் பால் சொரிவது போல்
வெறுங்கையில் முழம் போடும் வேலையிலா வீணன் போல
வெறுவாய் மெல்லுபவர்கட்குச் சிறிது அவல் அகப்பட்டது போல
வெற்றோசை இடும் மணி போல்
வேடர் கையி லகப்பட்ட தேன் கூண்டு போல 830
வேட்டை பார்க்கப் போய் வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டது
போல்
வேலியே பயிரை மேய்ந்தாற் போல
வேல் தொளைத்த புண்ணிலே கொள்ளிக்கட்டையைச்
சொருகினது போல்
வேழம் முழங்கினாற் போல
வேழத்திற் பட்டுருவுங் கோல் பஞ்சிற் பாயாதது போல
வேள்விக் கொலைக்கு வரும் ஆட்டின் மனம் போல
வையத் திறந்தாரை எண்ணிக் கொண்டற்று 837

அருஞ்சொற் பொருள் அகரவரிசை

அகழ்தல்-தோண்டுதல்
அங்கணம்-சலதாரை, சேறு
அளிந்த-கனிந்த, பழுத்த
இழுக்கல்-தவறுதல், வழுவுதல்
இறந்தாக்கின்-கடந்துமேற் செல்லின்
ஈங்கை-இண்டங் கொடி
உக்க-விழுந்த. சொரிந்த
எய்த்தல்-இளைத்தல், சளைத்தல்
ஒருமைப்பாடு-ஒன்றிப்பு
கட்படாம்-கண்மூடி
கதழ்வு-மிகுதி
கரதலாமலகம்-உள்ளங்கை நெல்லிக்கனி
கலங்கரை விளக்கம் - விளக்குக்கூண்டு
கறங்கு-காற்றாடி
கன்னல்-கரும்பு, சர்க்கரை
கிராதர்-வேடர், குணமற்றவர்
குரீஇ-புள்
குறிச்சி-சிற்றூர்
கூவல்-கிணறு
கூற்றம்-எமன்
கேளிக்கை-மகளிர் விளையாட்டு
கோடு-விலங்கின் கொம்பு
சரடு-நூல், கொடி
சிமிழ்த்தல்-பிடித்தல்
சிலந்தி-கிரந்திப்புண், பரு
சேண்-ஆகாயம்
தக்கை-கெட்டி
தடறு-வாளுறை
தவிசு-சேணம்
தாழி-பானை, சாடி
திடர்-மலைமேடு
துய்-பஞ்சு
துவ்வா-உண்ணாத
துறட்டு-அலக்கு
துன்னூசி-தையலூசி
நறுநெய்-பசுநெய்
நந்திய-விளைந்த
நாவாய்-கப்பல்
நீர்மிசை-நீர்மேல்
நீவி-சீலை
நுணல்-தவளை
பகடு எருது
பளுவு-சுமை
புடையன்-பாம்பு
புதல்-புதர்
புல்வாய்-மான்
புழல்-துவாரம்
புள்-பறவை
புனல்-நீர்
பூளை-இலவம்பஞ்சு
பொள்ளல்-பொத்தல்
மங்குல்-மேகம்
மஞ்சு-மேகம்
மடு-குளம்
மடுத்தவாய்-தடைபடுமிடம்
மறு-குற்றம்; மாசு
மன்றம்-வெளியிடம்
மூழை-அகப்பை. துடுப்பு
மோத்தை-வெள்ளாட்டுக்கடா
வாவி-குளம்
விச்சு-விதை
வில்லங்கம்-தடை
விளித்தல்-கூப்பிடல்; அழைத்தல்
வீறு வலிமை
வைத்தூறு-வைக்கோற்போர்
வேழம்-யானை

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், சென்னை. செ. 1.